ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய ஸ்ரீமத் வரத குரவே நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:

# பதரீ நாராயணப் பெருமாள் - வருஷத்திருநட்சத்திரம் - ஆடி - ஹஸ்தம்




பதரீ நாராயணப் பெருமாள்




கோயிலின் முகப்புத் தோற்றம்

தனியன்

கர்க்டே ஹஸ்த நசஷத்ரே பதரீ நிலயோத்பவம் /
அஷ்டாசஷர ப்ரதாதாரம் நாராயண மஹம்பஜே //

இந்த திவ்யதேச மங்களசாசன பாசுரங்கள் சிலவற்றை இங்கே அனுபவிப்போம்

பெரியாழ்வார் திருமொழி – 4ஆம் பத்து 7ஆம் திருமொழி 9ஆம் பாசுரம்

வடதிசைமதுரைசாளக்கிராமம் வைகுந்தம்துவரைஅயோத்தி *
இடமுடைவதரியிடவகையுடைய எம்புருடோத்தமனிருக்கை *
தடவரையதிரத்தரணிவிண்டிடியத் தலைப்பற்றிக்கைரமரம்சாடி *
கடலிணைக்கலங்கக்கடுத்திழிகங்கைக் கண்டமென்னும்கடிநகரே.

பெரியதிருமொழி 1ஆம் பத்து 3ஆம் திருமொழி 1ஆம் பாசுரம்

முற்றமூத்துக்கோல்துணையா முன்னடிநோக்கிவளைந்து *
இற்றகால்போல்தள்ளிமெள்ள இருந்துஅங்குஇளையாமுன் *
பெற்றதாய்போல் வந்தபேய்ச்சி பெருமுலையூடு* - உயிரை
வற்றவாங்கியுண்டவாயான் வதரிவணங்குதுமே.

பெரியதிருமொழி 1ஆம் பத்து 4ஆம் திருமொழி 1ஆம் பாசுரம்

ஏனமுனாகிஇருநிலமிடந்து அன்றுஇணையடிஇமையவர்வணங்க *
தானவனாகம்தரணியில்புரளத் தடஞ்சிலைகுனித்தஎன்தலைவன் *
தேனமர்சோலைக்கற்பகம்பயந்த தெய்வநல்நறுமலர்கொணர்ந்து *
வானவர்வணங்கும்கங்கையின்கரைமேல் வதரியாச்சிராமத்துள்ளானே.

சிறியதிருமடல் 74 ஆம் பாசுரம்

பாரோர்புகழும் வதரிவடமதுரை

ஸ்ரீபராசுரபட்டர் அருளியுள்ள ஸ்ரீரங்கநாத ஸ்தோத்ரத்தின் 8ஆம் ஸ்லோகம்

ஸ்ரீரங்கம் கரிஸைலமஞ்ஜநகிரிம் தார்சஷ்யாத்ரிஸிம்ஹாசலௌ
ஸ்ரீகூர்மம் புருஷோத்தமஞ்ச பதரீநாராயணம் நைமிஸம் /
ஸ்ரீமத்த்வாரவதீப்ராயாக மதுராயோத்யாகயா: புஷ்கரம்
ஸாளக்ராமகிரிம் நிஷேவ்ய ரமதே ராமாநுஜோSயம் முநி: //

பதரீ நாராயணப் பெருமாள் திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: சஷந்தவ்ய: